நேற்று ஒரே நாளில்

# வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே 10 ஆயிரம் பேர் பயணம்

## மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தகவல்

சென்னை, பிப்.17-

வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே 9 கிலோ மீட்டர் தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரெயில் பாதையில் ரெயில் போக்குவரத்தை கடந்த 15-ந் தேதி பிரதமர் நரேந்திர மோடி கொடியசைத்து தொடங்கிவைத்தார். அன்று ஒரு நாள் பயணிகள் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து கடந்த 16-ந் தேதி முதல் கட்டணம் வசூலிக்கப்பட்டது. அதன்படி விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து 1,727, திருவொற்றியூர் 1,544, காலடிப்பேட்டை 1,645, டோல்கேட் 1,276, புதுவண்ணாரப்பேட்டை 1,466, தண்டையார்பேட்டை 854, தியாகராய கல்லூரி 1,460 உள்பட 9 ஆயிரத்து 972 பயணிகள் நேற்று முன் தினம் ஒரு நாள் மட்டும் பயணம் செய்து உள்ளனர்.

இதுதவிர முதலாவது வழித்தடம் மற்றும் 2-வது வழித்தடம் அனைத்தும் சேர்த்து கடந்த 16-ந் தேதி அதிகபட்சமாக 80 ஆயிரத்து 152 பேர் பயணம் செய்து உள்ளனர். தொடர்ந்து பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட தகவல்களை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.